# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 04.11.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: உலகிலுள்ள மதங்களில் உண்மையானதும் இறைவனது விருப்பத்திற்கு ஏற்றதாகவும் இருக்கின்ற மதம் திருக்குர்ஆன் கொண்டு வந்திருக்கின்ற மதமாகும். மேலும் இரட்சிப்பின் வீட்டில் நுழைவதற்கான கதவு லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதாகும் என்ற தூதுச் செய்தியை அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு எட்ட வைப்பதற்காக மட்டுமே இந்த எளியவனை அல்லாஹ் அனுப்பியுள்ளான்.

இந்தக் காலத்தில் உலகில் திருக்குர்ஆனின் போதனைகளைப் பரப்புவதற்காகவும் திருக்குர்ஆனின் போதனைகளை உலகில் வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் அவரது மொழியிலேயே எட்ட வைக்கவும் செய்வதற்காக அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அந்த மாமனிதர், திருக்குர்ஆனின் மீது பேரன்பு கொண்டவராகவும், ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அடிமையாகவும் இருந்தவராவார்கள். அவரது பெயர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) ஆகும். அல்லாஹ்வின் பயில்வானாகிய அவர்கள்தான் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற கொடியை உலகில் பறக்கச் செய்து வழிதவறிச் சென்ற மனிதர்களுக்கு இரட்சிப்பின் வழியைக் காட்டித் தந்தார்கள். ஆன்மீக ஞானங்களால் நிறைந்திருக்கும் அவர்களது நூல்களும் அவர்களது வாழ்வின் ஒவ்வொரு நொடியும் அவர்களிடம் எந்தப் பணி ஒப்படைக்கப் -பட்டிருந்ததோ அதற்குரிய உரிமையை அவர்கள் செலுத்தியிருந்தார்கள் என்பதை நிரூபிக்கின்றது.

அந்தக் காலத்தில் சிறிதளவு கூட உலக வசதிகள் அவர்களிடம் இல்லாமல் இருந்த நிலையில் இவ்வளவு பெரிய பணியைச் செய்வது எளிதான காரியமல்ல. ஆனால், இறைவன் புறமிருந்து அனுப்பப்படுபவர்களுக்கு முழுமையாக இறைவன் மீதே நம்பிக்கை இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த இந்த பணியைச் செய்வதற்காக எந்த உலகத் தொடர்புகளையும் சார்ந்திருக்கவில்லை. மாறாக, தேவைக்கேற்ப அவர்கள் இறைவனிடம் வேண்டினார்கள். அல்லாஹ் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கு உதவி செய்தான். உலகத் திட்டங்களைத் தீட்டிச் செயல்பட வேண்டும் என்ற கட்டளையையும் இறைவன் வழங்கியிருந்ததால் அவர்கள் தங்களுக்கு நெருக்கமானவர்களிடமும் தன்னைப் பின்பற்றியவர்களிடமும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தியாகங்கள் செய்யும்படி அறிவிப்பு செய்தார்கள். அதில் பொருள் தியாகமும் அடங்கும். ஆனால், எந்த சந்தர்ப்பத்திலும் எவர் மீதும் அவர்கள் நம்பிக்கை வைக்கவில்லை. அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்படுபவர்கள், நபிமார்கள் ஆகியோரது நிரந்தரமான நடைமுறையாக எப்போதும் இருந்து வருவது, அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளுக்காகத் தியாகங்களுக்கான அறிவிப்புகளைச் செய்கின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் இதுபோன்ற அறிவிப்பைச் செய்தார்கள். ஆனால் எப்போதும் எனது நம்பிக்கை எனது இறைவன் மீதே இருக்கின்றது என்றே அவர்கள் கூறி வந்தார்கள். அவன் என்னிடம் ஒப்படைத்த இந்த மகத்தான பணியை நிறைவு செய்வதற்காக என்னிடம் வாக்குறுதிகளை வழங்கியுள்ளான். இந்தியத் துணைக் கண்டத்தில் மிகத் தொலைவிலுள்ள ஒரு சிற்றூரில் வசித்து வந்த ஒரு மனிதர் மூலம் திருக்குர்ஆனின் போதனைகளைப் பரப்புவதற்காகவும் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதன் மகத்துவத்தை மக்களின் உள்ளங்களில் அமரச் செய்வதற்காகவும் உள்ள இந்தப் பணியை என்னிடம் ஒப்படைத்துள்ளான் என்ற இந்த அறிவிப்பு ஒரு சாதாரண அறிவிப்பு அல்ல. பின்னர் உலகமும் இதை கண்டு கொண்டது. இந்த தூதுச் செய்தியானது அந்தக் கிராமத்திலிருந்து வெளியேறி இந்தியாவிலுள்ள பெரும் பெரும் நகரங்களிலும்

ஒவ்வொரு மூளையிலும் பரவியதுடன் மட்டுமின்றி, அந்த தூதுச் செய்தி ஐரோப்பா மற்றும் அமெரிக்கா வரை சென்றடைந்தது. இதன் மூலம் இஸ்லாத்தின் மகிமை உள்ளங்களில் நிலைபெற்றது. பெரும் பெரும் பாதிரிமார்களும், ஏனைய மதங்களின் தலைவர்களும் இஸ்லாத்தின் எதிரிகளாக இருந்தனர். தங்களது எண்ணத்தில் அவர்கள் ஆற்றல்மிக்கவர்களாகவும் செல்வம் படைத்தவர்களாகவும் இருந்தனர். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை எதிர்த்து அன்னாரது வழியில் தடையாக நின்றனர். அவ்வாறு செய்ததன் மூலம் ஒன்று அவர்கள் இழிவைத் தழுவினர். அல்லது இறைவனது விதி அவர்களை அழித்தது. இஸ்லாத்தின் எதிரிகளுக்கு ஏற்பட்ட இழிவு மற்றும் தோல்வியின் இந்தக் காட்சிகளை இந்தியத் துணைக்கண்டம் மற்றும் பாகிஸ்தான் மட்டும் பார்க்கவில்லை. மாறாக ஐரோப்பாவும் அமெரிக்காவும் இந்தக் காட்சியை பார்த்தன. ஆனால் அந்த முஸ்லிம் ஆலிம்கள் மீதும், பீர்கள் மீதும் அந்தோ பரிதாபம்! அவர்கள் இந்தக் காட்சிகளைக் கண்ட பிறகும்கூட அவர்களது கண்கள் திறக்கவில்லை. மாறாக, எதிர்ப்பில் அவர்கள் மேலும் முன்னேறினர். ஆனால் இறைவனின் விதியை எவரும் எதிர்த்து நிற்க முடியாது. நம்மவர்களும், மற்றவர்களும் செய்த இந்த எதிர்ப்புகள், பகைமை, விரோதம் ஆகியவை தொடர்ந்து நீடித்தன. இன்னும் அவை தமது பணியைச் செய்து வருகின்றன. அவை மேலும் வளர்வதற்கு உரமாகவும் தண்ணீராகவும் இருந்து வந்தன. இன்று வரை நாம் இந்தக் காட்சிகளைப் பார்க்கின்றோம். எப்போதெல்லாம் எந்த இடத்திலாவது ஏதாவது ஒரு வழிமுறை மூலமாக ஜமாஅத்தை அமுக்குவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டதோ அங்கெல்லாம் ஒரு புதிய மகிமையுடன் அல்லாஹ்வின் பயில்வானின் இந்த ஜமாஅத் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகியவாறு முன்னேற்றத்தின் புதிய இலக்குகளை அடைந்தது. அல்லாஹ்வின் இந்த அருள் எப்போதும் ஜமாஅத்துடன் இருந்து வருவதற்கான காரணம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த நோக்கத்திற்காக தோன்றினார்களோ அந்த நோக்கத்தை கண் முன் நிறுத்தி ஜமாஅத் செயல்பட்டது. ஜமாஅத்திலுள்ள நபர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல் வஸிய்யத் என்ற தமது நூலில் குறிப்பிட்டுக் கூறியுள்ள இந்தக் கட்டளையை கண் முன் நிறுத்தி செயல்பட்டனர்.

**அதில் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

பூமியின் பல்வேறு இடங்களில் குடிபெயர்ந்துள்ள அந்த ஆன்மாக்களை – அவர்கள் ஐரோப்பியர்களாக இருந்தாலும், ஆசியாவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களில் நல்லியல்பு கொண்டுள்ள அனைவரையும் தவ்ஹீதின் பக்கம் ஈர்க்கவே இறைவன் நாடியுள்ளான். மேலும் தனது அடியார்களை ஒரே மார்க்கத்தின் கீழ் ஒன்றுசேர்க்க நாடியுள்ளான். இதுவே இறைவனின் நோக்கமாகும். இதற்காகவே நான் உலகிற்கு அனுப்பப்பட்டுள்ளேன். எனவே நீங்கள் இந்த நோக்கத்தைப் பின்பற்றி செயல்படுங்கள். ஆனால் மென்மை, நல்லொழுக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்திக் காட்டி துஆக்கள் செய்வதில் உறுதியைக் காட்டுவதன் மூலம் இதை செய்ய வேண்டும்.

எனவே உலகை ஒரே மார்க்கத்தின் கீழ் ஒன்றுசேர்த்து தவ்ஹீதில் நிலைபெறச் செய்வது, திருக்குர்ஆனின் ஆட்சியை உலகில் நிலைநாட்டுவது, அதன் போதனைகளைப் பரப்புவது, நல்லியல்பு கொண்ட மக்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் ஒன்றுசேர்ப்பது ஆகிய இவை அனைத்தும் எத்தகு மகத்தான விரிவான பணிகளாக இருக்கின்றன என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமக்குப் பிறகு இந்தப் பணிகளைத்தான் ஜமாஅத்திடம் ஒப்படைத்துள்ளார்கள். ஆனால் இந்தப் பணிகள் மக்கள், தங்களது நிலைமைகளில் தூய மாற்றங்கள், தியாகங்கள், துஆக்கள் ஆகியவை இல்லாமல் நடக்காது. எதுவரை நாம் இதற்காக முயற்சிகள் செய்து வருவோமோ அதுவரை நாம் இந்த முன்னேற்றங்களைப் பார்த்துக் கொண்டிருப்போம். இதனை அல்லாஹ் ஜமாஅத்திற்காக விதித்துள்ளான். இன்று வரை ஜமாஅத்திற்கு இருந்து வரும் அழகும், மகிமையும் இதில் தான் உள்ளது. அதாவது இந்த நோக்கத்தைக் கொண்டவாறு ஜமாஅத் என்ற நிலையில் ஜமாஅத் முன்னேறிக் கொண்டே செல்கிறது. தம்மிடம் தூய மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக முயற்சிகள் செய்தவாறு அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக முயற்சிகளைச் செய்கின்றது. இதற்காக தியாகங்கள் செய்து கொண்டே செல்கின்றது. இந்த நோக்கங்களை

அடைவதற்காக துஆக்களின் பக்கம் கவனம் இருந்தால் எப்போதும் நாம் இன்ஷா அல்லாஹ் முன்னேற்றத்தின் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே செல்வோம். எப்போதெல்லாம் ஜமாஅத்திற்கு இந்த நோக்கத்தை அடைவதன் பக்கம் கவனமூட்டப்பட்டதோ அப்போதெல்லாம் ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் லப்பைக் என்றே கூறியுள்ளது. முன்பை விட அதிகமாக ஜமாஅத் மற்றும் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக துஆக்களில் ஈடுபட்டுள்ளது. பொருள் தியாகங்களிலும் ஈடுபட்டுள்ளது. கடந்த குத்பாக்களில் நான் நஃபிலான நோன்பு நோற்பது துஆக்கள் செய்வது தொடர்பாக கவனமூட்டியிருந்தேன். எனக்கு வரும் கடிதங்களில் இருந்தும் ஜமாஅத் அளவுகடந்த ஆர்வத்துடன் எனது இந்த குரலுக்கு செவிசாய்த்து லப்பைக் என்று கூறியிருப்பது தெரிய வருகிறது. ஒவ்வொருவரும் துஆ செய்வதில் ஈடுபட்டுள்ளனர். எவர்களுக்கு இதுபற்றி நான் கூறவில்லையோ அவர்களும் துஆக்கள் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். பாகிஸ்தானியர்கள் மட்டுமின்றி ஆப்பிரிக்காவிலுள்ள மக்களும், ஐரோப்பாவிலுள்ள மக்களும், அமெரிக்காவிலுள்ள மக்களும் துஆக்கள் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் பாகிஸ்தானிய சமூகத்தைச் சேர்ந்தவர்களல்ல. அவர்களும் கூட துஆக்களின் பக்கம் கவனம் செலுத்தியுள்ளனர். தங்களது பாகிஸ்தானிய சகோதரர்களுக்காகவும் ஏதாவது ஒரு வகையில் ஏதாவது ஒரு துன்பத்தில் சிக்கியுள்ள அல்லது துன்பங்களில் ஆழ்த்தப்படுகின்ற ஒவ்வொரு அஹ்மதிக்காகவும் துஆக்கள் செய்வதில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். பொருள் தியாகங்களின் பக்கம் அவர்களுக்கு கவனமூட்டப்பட்டால் அவர்கள் பொருள் தியாகங்கள் செய்வதில் முன்னேறுகின்றனர். அவர்கள் எத்தகைய நல்லுதாரணங்களைக் காட்டியுள்ளனர் என்றால் எவ்வாறு மார்க்கத்திற்காக தியாகங்கள் செய்வதற்கு இவர்கள் முன்னேறிச் செல்கின்றனர் என்பதைப் பார்க்கும் போது நமக்கு வியப்பாக இருக்கின்றது. இந்தக் காலத்தில் இஸ்லாத்தை தப்லீக் செய்வதற்காக பிரசுரங்கள், நூல்கள் ஆகியவற்றை வெளியிடுவது மிகவும் அவசியமானதாகும். முபல்லிக்குகளுக்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டியதுள்ளது. பள்ளிவாசல்கள் மற்றும் பிரச்சார நிலையங்களைக் கட்ட வேண்டியதுள்ளது. இன்றைய விரைவான காலக்கட்டத்தில் மற்ற ஊடகங்களை மீடியாக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் பெறுவதற்கு பொருள் தியாகங்களின் தேவை இருக்கின்றது. இன்றயை நாட்களில் M.T.A. தனிப்பட்ட விரிவான ஒரு தப்லீகிற்கான வழியாக இருக்கின்றது. அது தற்போது நான்கு செயற்கைகோள்களை பயன்படுத்தி வருகிறது. உலகிலுள்ள எந்தவொரு மூலையிலும் அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தி எட்டாமல் இல்லை. பிறகு 7 அல்லது 8 மொழிகளில் இந்த தூதுச் செய்தி எட்ட வைக்கப்படுகிறது. எனவே இது தப்லீகிற்கான ஒரு பெரிய வழியாக இருக்கின்றது. இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான ஒரு ஊடகமாக இது இருந்து வருகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த நோக்கத்தைப் பெறுவதற்காக வந்தார்களோ அந்த நோக்கத்தை இதன் மூலமாக நம்மால் நிறைவு செய்ய முடியும். இதற்காக பொருள் தியாகங்கள் செய்வதற்கான தேவை இருக்கின்றது. ஜமாஅத் முன்பை விட அதிகமாக பொருள் தியாகங்கள் செய்து வருகிறது.

இன்று நான் நமது மரபுக்கேற்ப தஹ்ரீகே ஜதீதின் புதிய வருடத்திற்கான அறிவிப்பைச் செய்வேன். இந்த திட்டத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் தொடங்கிய போது அந்த சமயத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்டு வந்த இந்த தூதுச் செய்தியை உலகிலிருந்து அழித்து விடுவதாக அஹ்மதிய்யத்தின் எதிரிகள் அறிவிப்பு செய்தார்கள். ஆனால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதற்குப் பதில் கூறும் முகமாக உலகின் எல்லா மூலைகளிலும் இந்த தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக பொருளாதார திட்டத்தை முன் வைத்தபோது அதற்கு மிகுந்த ஆர்வத்துடன் முன் வந்து லப்பைக் என்று கூறுகின்றவர்களின் காட்சியை உலகம் கண்டது. இன்று நாம் அல்லாஹ்வின் அருளால் உலகின் 200 நாடுகளில் இருக்கின்றோம். நான் ஏற்கனவே கூறியது போனறு M.T.A. மூலமாக மட்டும் ஒரு மகத்தான புரட்சி உலகில் வந்து கொண்டிருக்கின்றது. எனவே கிலாஃபத்தின் நிழலின் கீழ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று அவர்களது வருகையின் நோக்கத்தை நிறைவு செய்வதற்காக ஜமாஅத் தியாகங்களைச் செய்து வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நேசம் வைத்துள்ள இந்த முஸ்லிம்கள் அந்தோ! அல்லாஹ்வின் இந்த விதியைப் புரிந்து கொள்ள வேண்டும். தவ்ஹீதை நிலைத்து

நிற்கச் செய்வதற்காகவும், திருக்குர்ஆனின் போதனைகளை உலகில் பரப்புவதற்காகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆட்சியை உலகில் நிலைநாட்டுவதற்காகவும் இந்த அல்லாஹ்வின் பயில்வானுடன் இணைந்து பணியாற்றுவதற்காக அவர்கள் முன் வர வேண்டும். பிறகு அவர்கள் பார்க்கட்டும். அவர்கள் இழந்த அந்த பாக்கியத்தை மீண்டும் எவ்வாறு அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர் என்பதை அவர்கள் பார்க்கட்டும். பெரும் பெரும் சக்திகள் எவ்வாறு அவர்களுக்கு மதிப்பையும், மரியாதையையும் வழங்குகிறது என்பதை அவர்கள் பார்க்கட்டும். பிறகு எந்தவொரு பாக்கியம் கெட்ட கேலி சித்திரம் வரையக்கூடியவராக இருந்தாலும் அல்லது பத்திரிகை ஆசிரியராக இருந்தாலும் அவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக எந்தவொரு வீணான விஷத்தையும் கூறி அதை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான தைரியம் இருக்கிறது என்பதை அவர்கள் பார்க்கட்டும். சில நாட்களுக்கு முன்னர் பிரான்ஸில் ஒரு பத்திரிகை மீண்டும் ஒரு விஷமத்தனமான செயலைச் செய்துள்ளது. இதனால் நமது உள்ளங்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. இதற்கு எதிராக சட்டத்தின் வட்டத்திற்குள் எதிர்நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். இந்த மக்களுக்கு இதுபற்றி புரிய வையுங்கள். பொதுமக்களுக்கும் இது தொடர்பாக கவனமூட்டுங்கள் என்று நான் பிரான்ஸ் ஜமாஅத்திடம் கூறியிருந்தேன். இப்படிப்பட்ட செயலின் காரணமாக அல்லாஹ்வின் பிடி இவர்கள் மீது வந்து விடுகிறது. எனவே, அல்லாஹ்வின் பிடியிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள் என்று இவர்களிடம் கூற வேண்டும். இன்றைய நாட்களில் உலகம் தாமாகவே அழிவின் பக்கம் சென்று கொண்டிருக்கின்றது. சில இடங்களில் பேரழிவுகளும், சில இடங்களில் பொருளாதார சீர்குலைவுகளும் அதிகரித்து வருகிறது. இதற்கு காரணம் இவர்கள் இறைவனை மறந்து விட்டனர். அந்த இறைவனின் அன்பிற்குப் பாத்திரமானவர்கள் தொடர்பாக மிகவும் இழிவான தரக்குறைவான விஷயங்கள் பேசப்படுகிறது. அவர்களை இவர்கள் பரிகாசம் செய்கின்றனர். இவ்வாறு இவர்கள் இறைவனின் தன்மான உணர்விற்கு சவால் விடுகின்றனர். இறைவனைப் பற்றிய அச்சத்தை உலகத்திற்கு ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இன்று அஹ்மதிகள் இந்தப் பணியைச் செய்து கொண்டுதான் இருக்கின்றனர். எல்லா முஸ்லிம்களும் இந்த உண்மையைப் புரிந்து கொண்டால் அதன் மூலமாக எங்கு அவர்கள் தமது இம்மையையும் மறுமையையும் சரிசெய்து கொள்வார்களோ அங்கு அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கும் அவர்கள் வாரிசாகி விடுகின்றனர். அந்தோ! இவர்களுக்கு இதுபற்றிய அறிவு இருக்க வேண்டுமே!

எவ்வாறிருப்பினும் நான் ஏற்கனவே கூறியது போன்று முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் அஹ்மதிய்யத்தை அழித்து விடுவோம் என்று உரத்த குரலில் வாதம் செய்த சமயத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தை உலகில் பரப்புவதற்காக ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அதற்கு செவி சாய்த்தவாறு ஜமாஅத்திலுள்ள நபர்களை ஆண்கள், சிறுவர்கள், பெண்கள் ஆகியோர் லப்பைக் என்று கூறினார்கள். லப்பைக் என்று கூறியவாறு தியாகங்களின் நல்லுதாரணங்களை நிலைநாட்டினார்கள். இன்று நாம் உலகத்தில் தஹ்ரீகே ஜதீதின் பழங்கள் இருப்பதைப் பார்க்கின்றோம். மாறாக உலகில் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யத்தின் கனிகள் நிறைந்த மரங்கள், இன்னும் சொல்வதென்றால் கனிகளின் சுமையால் குனிந்துள்ள மரங்கள் இருப்பதை நாம் பார்க்கின்றோம். இவை இந்த தியாகங்களின் விளைவாகும்.

எங்கு பல்வேறு கட்டாய சந்தாக்கள் மற்றும் இன்னும் பிற திட்டங்களில் ஜமாஅத்திலுள்ள நபர்கள் தியாகங்கள் செய்கின்றார்களோ அங்கு தஹ்ரீகே ஜதீதிலும் வழக்கத்திற்கு மாற்றமாக பெரும் தியாகங்கள் செய்யப்பட்டுள்ளது. இன்றைய நாட்களில் உலகம் பொருளாதார சீர்குலைவிற்கு இரையாகி உள்ளது. இந்நிலையில் அஹ்மதிகள் செய்கின்ற இந்த தியாகங்களைப் பார்த்து அல்லாஹ்வைப் புகழ்வதில் நமது நாவுகள் நிரம்பி விடுகின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த சொற்கள் நினைவுக்கு வருகின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஜமாஅத்தின் கலப்பற்ற மனத்தூய்மை, அன்பு, ஈமானிய உணர்வு ஆகியவற்றைப் பார்த்து நமக்கு மிகுந்த வியப்பு ஏற்படுகின்றது.

பொருளாதார சீர்குலைவு தொடர்பாக நான் இதையும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இப்போது இது எங்கு போய் நிற்கும் என்பதை நாம் கூற முடியாது. இதில் எந்த அளவு கடுமையான நிலை உருவாகும் என்பதை நாம் கூற முடியாது. எனவே அஹ்மதிகள் எல்லா சமயத்திலும் சில நாட்களுக்கான உணவுப் பொருள்களை தங்களின் வீடுகளில் வைத்திருக்க வேண்டும். ஏழை நாடுகளுக்கு இப்படிப்பட்ட நிலைமைகளை சகித்துக் கொள்வதற்கான பழக்கம் இருக்கின்றது. இதற்காக ஏதாவது கொஞ்சமாவது அவர்கள் வைத்திருப்பார்கள். ஆனால் இந்த நாடுகளில் இப்படிப்பட்ட பழக்கம் இல்லை. ஏனென்றால், சீர்குலைவு என்பது என்ன என்பது இவர்களுக்கு தெரியாது. இந்த மக்களோ இறுதி சீர்குலைவை இரண்டாவது உலகப்போர் நடந்த சமயத்தில்தான் பார்த்தார்கள். அதற்குப் பிறகு மீண்டும் இதுபோன்ற நிலையை அவர்கள் பார்க்கவில்லை. எனவே எது நடக்கலாம்? என்பதைப் பற்றி இவர்களின் புதிய தலைமுறைக்கு சிறிதளவு கூட உணர்வே இல்லை.

இதற்காக பதட்டப்பட வேண்டிய தேவையும் இல்லை. முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்வதன் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்காக அஹ்மதிகள் கொஞ்சமாவது தங்களால் இயன்ற அளவில் கொஞ்சம் உணவுப்பொருள்களை கண்டிப்பாக வீட்டில் வைத்திருக்க வேண்டும்.

தன்னைப் படைத்தவனை அடையாளம் கண்டு கொள்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் உலகிற்கு வழங்க துஆவும் செய்ய வேண்டும். அதன் மூலம் அவர்கள் இறைவனின் பிடியிலிருந்து தப்பிக்க வேண்டும். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

இப்போது நான் மீண்டும் ஜமாஅத்தின் கலப்பற்ற மனத்தூய்மை, பற்று ஆகியவற்றை வெளிப்படுத்திக் காட்டும் வகையில் இவர்களது பொருள் தியாகங்கள் தொடர்பாக சிலவற்றைக் கூறுகின்றேன். அதன் மூலம் உலகின் ஒவ்வொரு மூலையிலும் எவ்வாறு பல்வேறு வகையான பொருள் தியாகங்களில் ஜமாஅத் சகோதரர்கள் எத்தகைய கலப்பற்ற மனத்தூய்மை, பற்று ஆகியவற்றை வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர். ஈமானில் முன்னேறுவதற்காக எவ்வாறு தங்களது தியாகங்களைச் செய்வதில் அவர்கள் உழைத்துள்ளனர் என்பது தெரிய வரும்.

ஜமாஅத்தை அழித்து விடுவது தொடர்பாக பேசியவர்கள் எவரையும் இன்று நாம் பார்க்க முடியவில்லை. இத்தகையவர்களது சீடர்களும், இவர்களது இயல்பைக் கொண்டவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு எவ்வாறு இந்த மக்கள் தாங்கள் ஏழைகளாக இருந்தும்கூட இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காகத் தியாகங்களைச் செய்கின்றனர். மனத்தூய்மை மற்றும் பற்றின் முன்மாதிரிகளைக் காட்டுகின்றனர் என்பதை பார்க்கட்டும்.

**நமது ஐவரிகோஸ்ட் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

நமது நண்பரான ஆலி டோக் விதுராகா சாஹிப் அவர்கள் 2009 ஆம் ஆண்டு இறுதியில் பைஅத் செய்தார். பைஅத் செய்த முதல் நாளிலிருந்தே தனது வருவாயில் கணக்குப் பார்த்து முறையாக வருமானத்திற்கேற்ப சந்தா செலுத்த ஆரம்பித்தார். இந்த காலக்கட்டத்தில் அவர் சந்தாவில் எண்ணற்ற அருள்களைக் கண்டார். ஒருநாள் ஜமாஅத்தின் பழைய உறுப்பினர்களுடன் சேர்ந்து இந்த அருள்களைப் பற்றி அவர் பேசிக் கொண்டிருந்தார். இந்த பழைய உறுப்பினர்களில் 2004 ஆம் ஆண்டு பைஅத் செய்த ஒருவர் இந்த சம்பவங்களைக் கேட்டு தனது சந்தாவை 2000 பிராங்க்ஸிலிருந்து உயர்த்தி 5000 பிராங்க்ஸாக தருவதற்கு சம்மதித்தார். அவர் கூறுகின்றார்: இப்போது அவர் தொகையைச் செலுத்தக் கூட ஆரம்பிக்கவில்லை. ஆனால், இவரது வருவாயில் வழக்கத்திற்கு மாற்றமான அதிகரிப்பு இருப்பதை இவர் பார்த்தார். அந்தப் பழைய உறுப்பினர் என்னிடம் வந்தார். முழு சம்பவத்தையும் கூறிவிட்டு அவர் நான் ஏற்கனவே 5000 பிராங்க்ஸ் தருவதற்குச் சம்மதித்திருந்தேன். ஆனால் இன்று நான் ஐந்திற்குப் பதிலாக 10,000 பிராங்க்ஸ் மாதந்தோறும் செலுத்துவேன் என்று கூறினார். பிறகு இதற்கேற்ப அவர் தனது

தொகையைச் செலுத்தவும் ஆரம்பித்து விட்டார். இவ்வாறு மற்ற உறுப்பினர்களும் சந்தா செலுத்துவதில் முன்னேறி வருகின்றனர்.

**கயானா கோங்காரியின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

ஒரு இளைஞரான மதிப்பிற்குரிய முஹம்மது மாலிகா சாஹிப் அவர்களுக்கு நீண்ட காலமாக தப்லீக் செய்யப்பட்ட பிறகு இவர் ஜமாஅத்தில் இணைந்தார். தொழிலைப் பொருத்தவரையில் இவர் ஒரு கட்டிடக்கலை நிபுணர் ஆவார். அவர் பைஅத் செய்த சமயத்தில் கட்டிடம் கட்டும் கம்பெனியில் வேலை செய்து வந்தார். மிக சாதாரணமான சம்பளம்தான் இவர் பெற்று வந்தார். பைஅத்திற்குப் பிறகு இவருக்கு ஜமாஅத்தின் பொருளாதார அமைப்பு பற்றி அறிமுகம் செய்யப்பட்ட போது அவர் இந்த சந்தாக்களில் மிகவும் முக்கியமான சந்தா எது? என்று கேட்டார். அவரிடம் வஸிய்யத் சந்தா, கட்டாயச் சந்தா, ஜல்ஸா ஸாலானா சந்தா என்று கூறப்பட்டது. இவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் தொடங்கப்பட்ட சந்தாக்களாகும் என்று அவரிடம் கூறப்பட்டது. பிறகு வஸிய்யத்தின் முக்கியத்துவம் பற்றி அவருக்கு கூறப்பட்ட போது உடனடியாக அவர் இன்றிலிருந்து நான் வஸிய்யத் சந்தா கொடுப்பேன் என்று கூறினார். அப்போது முபல்லிக் சாஹிப் அவர்கள் வஸிய்யத் ஒரு அமைப்பாகும். அந்த அமைப்பில் நுழைந்த பிறகு நீங்கள் அந்தச் சந்தாவை செலுத்தலாம் என்று கூறினார். அதற்கு நான் அந்த அமைப்பில் சேர்கின்றேன் என்று அவர் கூறினார். பிறகு அவர் அல் வஸிய்யத் என்ற நூலைப் படித்தார். அதற்குப் பிறகு வஸிய்யத் செய்தார். மிகுந்த நேர்மையுடன் தனது வருமானத்திலிருந்தும் பத்தில் ஒரு பங்கை சந்தாவாக செலுத்தி வந்தார். வஸிய்யத்திற்கான அனுமதி கிடைப்பதற்கு சிறிது கால அவகாசம் தேவைப்படும். அந்த சமயம் வரும்வரை தொடர்ச்சியாக முறையாக இவர் வஸிய்யத் சந்தா செலுத்தி வந்தார். இவ்வாறு சிறிது காலம் கழிந்த பிறகு இதை தவிர்த்துள்ள ஏனைய பொருளாதாரத் திட்டங்களிலும் இவர் பங்கு பெற்றார். பிறகு சிறிது காலம் கழிந்த பிறகு அவர் இருந்து வந்த கம்பெனியை விட்டுவிட்டார். சொந்த தொழிலைத் தொடங்கினார். இப்போது அல்லாஹ்வின் அருளால் இவர் தனது கம்பெனியின் எஜமானராக இருந்து வருகின்றார். முழு நாட்களிலும் தனது நேர்மையின் காரணமாக இவர் புகழ்பெற்று விளங்குகின்றார். இதன் காரணமாக இவரது தொழிலும் மிகவும் சிறந்து விளங்கியது. அவர் எல்லாரது முன்னிலையிலும் அமர்ந்தவாறு வெளிப்படையாகவே இந்த அருள்கள் எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்ததன் காரணமாகவே கிடைத்தது. வஸிய்யத் அமைப்பில் இணைந்ததன் காரணமாகவே கிடைத்தது என்று கூறி வருகின்றார்.

**கானாவிலிருந்து நமது முபல்லிக் இப்ராஹீம் ஸயீத் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

நமது நண்பரான அல்ஹாஜ் முஹம்மது அபூபே அவர்கள் என்னுடன் தப்லீக் சுற்றுப்பயணத்தின் போது டோகோ வந்தார். அங்கு நைஜுன் என்ற இடத்தில் வெயிலில் நின்றவாறு நாங்கள் ளுஹர் தொழுகை தொழுதோம். அல்ஹாஜ் முஹம்மது அபூபே அவர்கள் இந்த மக்களுக்காக பள்ளிவாசல் கட்டுவது இவர்களுக்குள்ள உரிமையாகும் என்று கூறினார். அது சிறிய ஜமாஅத் ஆகவும் முற்றிலும் புதிய ஜமாஅத்தாகவும் இருந்தது. இதற்காக ஒரு பெரும் பொருள் தியாகம் செய்தவாறு ஒரு அழகிய பள்ளிவாசலை இவர்களுக்காக அவர் கட்டித் தந்தார். அல்ஹாஜ் சாஹிப் அவர்கள் செல்வம் படைத்தவர்கள் ஆவார்கள். இந்தப் பள்ளிவாசலில் 300 நபர்கள் தொழ முடியும். இந்தப் பள்ளிவாசலுக்கான மினாராவும் கட்டப்பட்டு வருகிறது. இந்த இடம் மிகவும் தொலைவிலுள்ள ஒரு பகுதியில் இருக்கின்றது. அங்கு பொருள்களைக் கொண்டு சேர்ப்பது சிரமமான காரியமாகும். இருந்தபோதிலும் அல்ஹாஜ் சாஹிப் தாமாகவே மிகவும் சிரமப்பட்டு இதற்காக பணம் செலவழித்து கட்டிடம் கட்டுவதற்கான பொருள்களை அங்கு கொண்டு போய் சேர்த்து வருகின்றார்.

**ஐவரிகோஸ்ட்டின் சதர் லஜ்னா அவர்கள் எழுதுகின்றார்கள்:**

இந்த வருடம் மஜ்லிஸே சூராவில் அஹ்மதிய்யா ஜமாஅத் ஐவரிகோஸ்டின் 50வது வருட ஜூபிளி கொண்டாடிய சந்தர்ப்பத்தில் தலைமையகப் பள்ளிவாசலைக் கட்டுவதற்காக சந்தாக்களுக்கான அறிவிப்பு

செய்யப்பட்டது. அப்போது லஜ்னா உறுப்பினர்கள் அதே சமயத்தில் ஒவ்வொருவரும் தாம் இதற்காக ஒரு லட்சம் ஃபிராங்க் ஸிஃபா தருவதாக வாக்குறுதி வழங்கினார்கள். எங்களது தஹ்ரீகே ஜதீத் செயலர் ஒரு தூய பற்றுள்ள அஹ்மதி ஆவார். அவர் ஒரு லட்சம் ஃபிராங் ஸிஃபா தொகையை உடனடியாக செலுத்தி விட்டார். அவர்கள் வழங்குகின்ற இந்த தொகை ஒரு இலட்சம் ஃபிராங்க் ஸிஃபா என்று வெறும் 135 பவுண்டுகளாக இருந்தாலும் இது ஆப்பிரிக்காவிற்கு மிகப்பெரிய தொகையாகும். அந்த பெண்ணிற்கு ஒரு சிறிய காய்கறி கடை இருந்து வந்தது.

**புர்கினோஃபாஸோவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

பாவுலா என்ற இடத்திலுள்ள நமது ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு சகோதரர் அதாரா அப்துர் ரஹீம் சாஹிப் நமது மிஷனரியின் சொற்பொழிவைக் கேட்டு இவ்வாறு உடன்படிக்கை செய்தார். நான் ஏழையாக இருக்கின்றேன். தானியங்களைத் தவிர எனது வாழ்வாதாரத்திற்கு துணையாக வேறு எந்த வழியும் இல்லை. ஆனால் நான் உடன்படிக்கை செய்கின்றேன். நான் ஒவ்வொரு மாதமும் 100 ஃபிராங்க் ஸிஃபா சந்தாவாக கொடுப்பேன் என்று அவர் உடன்படிக்கை செய்து சில நாட்கள் தான் கழிந்திருக்கும். மழை குறைவாக பெய்து வந்த சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியது வந்தது. எல்லா மக்களும் இதன் காரணமாக கவலையடைய ஆரம்பித்தனர். இவர் கூறுகின்றார்: ஆனால், எனது விளைச்சல் அல்லாஹ்வின் அருளால் நன்றாக இருந்தது. இந்த விஷயம் சந்தா தொடர்பான எனது ஈமானை மேலும் அதிகரிக்கச் செய்தது. அப்போது நான் 6000 ஃபிராங்க் ஸிஃபா தஹ்ரீகே ஜதீத் சந்தாவாக கொடுப்பேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டேன். இந்த உடன்படிக்கையை எடுத்து சில நாட்கள் தான் கழிந்திருக்கும். விளைச்சல்கள் அறுவடை செய்யப்படுவதற்கான நேரம் வந்தது. எனது விளைச்சல்களின் தன்மை எல்லாவற்றையும் விட தனியானதாகவும் அதிகமானதாகவும் இருந்தது. அப்போது நான் வழக்கத்திற்கு மாற்றமாக எந்த விளைச்சல்கள் ஏற்பட்டுள்ளதோ அது சந்தாவின் பரக்கத்தினால்தான் ஏற்பட்டுள்ளது. அப்போது நான் எனது தஹ்ரீகே ஜதீதின் சந்தாவை உயர்த்தி 12000 பிராங்க்ஸ்களாக ஆக்கி விட்டேன்.

**புர்கினோஃபாஸோவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

சூரி என்ற பெயருடைய கிராமத்தைச் சேர்ந்த ஓர் அஹ்மதி பெரியவர் கபூரே சாஹிப் அவர்கள் அவரது குடும்பத்தில் தனித்தவராக அஹ்மதியானார். அவர் தாமே கூறுகின்றார்: ஒரு நீண்ட காலமாக அவர் தமது பலவீனமான வயது மற்றும் பல்வேறு நோய்களின் காரணமாக தொழுகைகளை நிறைவேற்றுவதில் பலவீனமானவராக இருந்தார். இந்த விஷயத்தால் ஒவ்வொரு நொடியும் அவருக்கு துக்கம் இருந்து வந்தது. இந்த வருடம் இவர் பைஅத் செய்த பிறகு 70,000 ஃபிராங்க் ஸிஃபா சந்தாவாக கொடுத்தேன். சந்தா கொடுத்ததுதான் தாமதம். மிக நீண்ட காலமாக சீர்குலைந்து போன ஆரோக்கியம் மீண்டும் அவரிடம் திரும்ப ஆரம்பித்தது. தொழுகைகளை நிறைவேற்றுகின்ற அந்த இழந்துபோன நல்வாய்ப்பு மீண்டும் கிடைக்க ஆரம்பித்தது. எதுவரையென்றால் இப்போது எல்லா தொழுகைகளையும் நிறைவேற்றுவதுடன் தஹஜ்ஜுத் தொழுவதற்கான நல்வாய்ப்பும் எனக்கு கிடைத்துள்ளது என்று இவர் கூறுகின்றார். மேலும் கூறுகின்றார்: இவை எல்லாமே அல்லாஹ்வின் அருள்களாகும். இவை பொருள் தியாகத்தின் பரக்கத்தால் கிடைத்துள்ளது. சந்தாக்கள் தொழுகைகளுக்கான நல்வாய்ப்பும் வழங்கி விட்டது என்று இவரே கூறுகின்றார்.

**ஆஸ்திரேலியாவின் அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்:**

2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தஹ்ரீகே ஜதீதிற்கான புதிய வருடத்திற்கான அறிவிப்பு செய்யப்பட்டது. அப்போது ஆஸ்திரேலியாவின் தஹ்ரீகே ஜதீத் துறை சார்பாக நான் அவர்களுக்கு ஆலோசனைகளின் ஒளியில் எல்லா ஜமாஅத்துகளும் தஹ்ரீகே ஜதீதின் பொருள் தியாகத்தில் முன்னேறுவதன் பக்கம் கவனமூட்டப்பட்டது. மெல்போர்னின் அஹ்மதிய்யா ஜமாஅத் தங்களது சந்தா தொகையை இரண்டு மடங்காக உயர்த்துவதாக வாக்குறுதி வழங்கினர். அவர்கள் இதற்காக மிகவும் உழைத்து முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருளால் கடந்த வருடத்திலிருந்து 164% உயர்த்தி தமது சந்தாவை தந்துள்ளார்கள்.

கனரா அஹ்மதிய்யா ஜமாஅத் கடந்த வருடத்திலிருந்து 75% உயர்த்தி தமது சந்தாவை செலுத்தியுள்ளனர். இவ்வாறு ஒட்டுமொத்த சந்தாக்களை செலுத்துவதில் ஜமாஅத்துகள் வழக்கத்திற்கு மாற்றமாக முன்னேறி வருகின்றது.

**இந்தியாவிலிருந்தும் நமது இன்ஸ்பெக்டர் தஹ்ரீகே ஜதீத் எழுதுகின்றார்:**

பிப்ரவரி மாதத்தில் நான் வகீலுல் மால் சாஹிபுடன் தமிழ்நாடு மாநிலத்தில் சுற்றுப் பயணத்தில் இருந்தேன். நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் கோயம்புத்தூரை சென்றடைந்தோம். மக்ரிப் தொழுகைக்குப் பிறகு ஒரு தர்பிய்யத் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் வகீலுல் மால் சாஹிப் அவர்கள் தஹ்ரீகே ஜதீதின் நோக்கங்கள் – அந்த திட்டத்தின் பின்னணி ஆகியவை தொடர்பாக விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். கூட்டம் முடிவடைந்த பிறகு பள்ளிவாசலில் அமர்ந்திருந்த அனைத்து ஜமாஅத் சகோதரர்களிடமும் புது வருடத்திற்கான வாக்குறுதி வாங்கப்பட்டது. ஒரு தூய உள்ளம் படைத்த சகோதரரின் கடந்த வருட வாக்குறுதி 20,000 ரூபாயாக இருந்தது. கேரளப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பொதுவாகவே செல்வம் படைத்தவர்களாக இருக்கின்றார்கள். வகீலுல் மால் சாஹிப் இவரிடம் ஒரு லட்சம் ரூபாய் வாக்குறுதியாக எழுதுமாறு கூறினார்கள். முதலில் அவர் தனது தவிர்க்க முடியாத நிலையை எடுத்துக் கூறினார். பிறகு இந்த தியாகத்தைச் செய்ய அவர் சம்மதித்தார். அப்போது அவருடன் அவருடைய இரண்டு வக்ஃப் செய்யப்பட்ட சிறுமிகளும் இருந்தார்கள். பள்ளிவாசலை விட்டு வெளியேறி தஹ்ரீகே ஜதீத் செயலரின் வீட்டிற்குச் சென்றதும் இன்ஸ்பெக்டருக்கு போன் வந்ததாக அவர் கூறுகின்றார். ஒரு லட்சம் ரூபாய் வாக்குறுதி கூறி சென்ற அந்த நபர் போனில் எனது மூத்த மகள் கூறுகின்றார். தந்தையாரே! தஹ்ரீகே ஜதீதில் நீங்கள் எழுதியுள்ள வாக்குறுதி நமக்கு மிகவும் குறைவாக இருக்கின்றது. இதை மேலும் கூட்டி ஒன்றரை லட்சம் ரூபாயாக ஆக்கி விடுங்கள் என்று கூறுகின்றார். எனவே எனது வாக்குறுதி ஒன்றரை லட்சமாகும் என்று அவர் கூறினார்.

தஹ்ரீகே ஜதீதின் பிரதிநிதி காஷ்மீரில் சுற்றுப்பயணம் செய்தார். இந்தியாவிலுள்ள காஷ்மீரில் இது. அவர் கூறுகின்றார்:

ஆகனூரைச் சார்ந்த வயது முதிர்ந்த ஒரு சகோதரரை சந்திக்க நேர்ந்தது. இவரது வாழ்நாள் கழிவதும் சிகிச்சைக்கான செலவுகளும் அவருக்கு கிடைத்து வரும். ஒரு எல்லைக்குட்பட்ட அரசாங்க ஓய்வூதியத்தையே சார்ந்திருந்தது. கடந்த சில நாட்களுக்கு முன் மருந்துகளுக்காக அவர் செலவிட்ட தொகை அவருக்கு கிடைத்து வரும் பென்ஸன் தொகையை விட அதிகமாக ஆகிவிட்டது. அவரது பட்ஜெட்டில் மேலும் கூட்டுவது எங்களுக்கு பொருத்தமான செயலாக தெரியவில்லை. துஆ செய்த பிறகு நாங்கள் அவரிடமிருந்து விடைபெற்றுச் செல்லும் சமயத்தில் அந்த சகோதரர் என்னிடம் உங்களது வருகைக்கான நோக்கம் என்ன என்பவதை தெரிவியுங்கள் என்று கூறினார். பிரதிநிதி கூறுகின்றார்: நான் அவரிடம் தஹ்ரீகே ஜதீத் சந்தாவை மேலும் அதிகரிப்பது தொடர்பாக எனக்கு கூறப்பட்ட வழிகாட்டல்களை அவருக்கு தெரிவித்தேன. அப்போது அந்த சகோதரர் உடனடியாக புதிய தெம்புடன் நான் உயிருடன் இருக்கின்ற வரை கலீஃபத்துல் மஸீஹின் சொற்களைக் கேட்டு அதற்கு லப்பைக் என்று கூறி வருவேன். இவ்வாறு கூறியதும் அவரது கண்களில் கண்ணீர் வந்தது. அப்போது அவர் கூறினார்: இறைவன் உலகத்தில் எனக்கு தேவையான மருந்துகளின் பட்ஜெட்டை உயர்த்தியிருக்கும் போது நான் எனது மறுமையின் பட்ஜெட்டை ஏன் குறைக்க வேண்டும்? பிறகு கட்டளையை நிறைவேற்றும் வகையில் இவர் தனது பட்ஜெட்டை கூட்டியதுடன் மட்டுமல்லாமல் தனது பாதி சந்தா தொகையையும் செலுத்தினார்.

**கூடுதல் வகீலுல் மால் பாகிஸ்தான் எழுதுகின்றார்கள்:**

கடந்த சில நாட்களாக சிந்து மாகாணத்தின் நிலை மோசமாக இருந்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன் பெருமழை பெய்ததன் காரணமாக இந்த நிலை உருவானது. இந்த சிந்து மாகாணத்தைச் சார்ந்த ஒரு நபரின் வாக்குறுதி 50,000 ரூபாயாக இருந்தது. நான் அவரது நிலைமையைப் பார்த்து இவரது விளைச்சல்களுக்கு ஏற்பட்ட இழப்பையும் பார்த்து விட்டு அவர் பணக்காரரக இருந்ததால் உங்களுடைய

வாக்குறுதி அதிகமாக இருக்க வேண்டும் என்று நான் அவரிடம் கூறினேன். இதைக் கேட்டதும் அவர் தனது வாக்குறுதியை 5 லட்சம் ரூபாயாக ஆக்கிவிட்டார். அந்த தொகையை ரொக்கமாக அவர் உடனடியாக செலுத்தினார்.

சில நாட்களுக்குப் பிறகு வகீலுல் மால் சாஹிப் ஹைதராபாத்திற்கு திரும்ப வந்து விட்டார். அப்போது அந்த நபர் அவருக்கு போன் செய்து நீங்கள் கலீஃபத்துல் மஸீஹின் பிரதிநிதியாக என்னிடம் வந்தீர்கள். நான் அப்போது 5 லட்சம் ரூபாய்க்கான வாக்குறுதியை கூறினேன். எனது நிலைமையைப் பார்த்து விட்டு நீங்கள் என்னிடம் இவ்வளவு தொகை தான் கேட்டீர்கள். ஆனால், பைஅத் உடன்படிககை என்னிடம் எதிர்பார்ப்பது இதை விட அதிகமாக நான் வாக்குறுதி வழங்க வேண்டும் என்பதை தான் நான் புரிந்து கொண்டேன். என்னிடம் இருப்பதை நான் கொடுக்க வேண்டும் என்று கூறி விட்டு அங்கேயே அவர் பத்து லட்சம் ரூபாய்க்கான வாக்குறுதியை வழங்கினார்.

பிறகு இந்த நபர் வீட்டிற்குச் சென்றதும் இவரது மனைவி கூறினார்: என் தரப்பிலிருந்தும் என்னிடம் இருக்கின்ற நகைகளை நான் தஹ்ரீகே ஜதீதிற்காக கொடுக்க விரும்புகின்றேன். அவரது போன் வந்தது. அதில் அவர் எனது மனைவி இப்போதே இங்கிருந்து சென்று தலைமையக பிரதிநிதியிடம் இந்த நகைகளைக் கொடுத்து விட்டு வாருங்கள். இரவில் என்னிடம் நான் இதை வைக்கமாட்டேன் என்று கூறுகின்றார் என்று கூறினார். பிறகு இவர் அவரது மனைவிக்கு போனில் பேசிப் புரிய வைத்தார். இது இரவு நேரமாகும். சிந்து பகுதியில் நிலைமை எப்படிப்பட்டது என்றால் இரவில் நகைகளுடன் வருவது சரியல்ல. காலையில் அதைப் பெற்றுக் கொள்கிறோம் என்று கூறினார். ஆனால் அந்தப் பெண் மிகவும் பிடிவாதமாக இப்போது நான் இந்த நகைகளை அவரிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கூறினார். பிறகு வேறு வழியில்லாமல் கணவருக்கு இரவில் செல்ல வேண்டியது வந்தது. ஆனால் ஒருவர் நிய்யத் வைத்து விட்டால் அல்லாஹ்விடம் அந்த பொருள் சென்று சேர்ந்து விடுகிறது. நிலைமைகளைப் பார்த்த பிறகும் இந்த அளவு உணர்வுமிக்கவர்களாகவும் ஆகக் கூடாது. இரவில் அங்குள்ள மோசமான நிலைமையில் பயணம் செய்வது உகந்ததல்ல. அல்லாஹ் அருள் செய்தான். எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை. எவ்வாறிருப்பினும், முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். காரணமில்லாமல் தன்னைத்தானே சோதனையில் ஆழ்த்திக் கொள்ளக் கூடாது.

கஸகிஸ்தானிலுள்ள நமது புதிதாக பைஅத் செய்த நண்பர் தொடர்பாக நமது ஜமாஅத்தின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:

ஜமாஅத்தின் தலைமையக பள்ளிவாசல் மற்றும் பிரச்சார நிலையத்திற்காக ஒரு நிலத்தை அவர் வாங்கித் தந்தார். அத்துடன் இருந்த இரண்டு மாடி கட்டிடம் அடங்கிய ஒரு வீட்டையும் வாங்கிக் கொடுத்தார். பிறகு இன்னொரு நகரத்திலும் பள்ளிவாசலைக் கட்டுவதற்காக ஒரு பிளாட்டை வாங்கித் தந்தார். இந்த புதிதாக பைஅத் செய்த இந்த நபர் ஒட்டுமொத்தமாக இதற்காக 4 லட்சத்து 95 ஆயிரம் டாலர்கள் தியாகம் செய்துள்ளனர்.

**ஜெர்மனியின் தஹ்ரீகே ஜதீத் செயலர் எழுதுகின்றார்:**

ஒருவருக்கு தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுப்பதற்காக கூறப்பட்டது. அதன் அருள்களைப் பற்றி கேட்ட பிறகு ஒரு பெண் அவர் நகைகள் வாங்க வைத்திருந்த 1000 யூரோக்களை அவரிடம் கொடுத்து விட்டார். ஜெர்மனியிலுள்ள பல லஜனாக்களும் தங்களது நகைகளை இத்திட்டத்திற்காக வழங்கியுள்ளார்கள். ஒரு சகோதரி ஒரு குழுவை உருவாக்கி இருந்தார். அந்தக் குழுவிற்கு சொந்தமான முழு தொகையையும் அவர் சந்தாவிற்காக கொடுத்து விட்டார்.

ஜெர்மனியில் இன்ஸ்பெக்டர் அவர்கள் சுற்றுப் பயணத்தில் சென்ற விபரத்தை தெரிவிக்கின்றார்கள்.

சுற்றுப் பயணத்தின் போது தஹ்ரீகே ஜதீத் செயலரான ஒரு நண்பர் அந்த துண்டில் ஏதோ எழுதி என்னிடம் கொடுத்தார். அந்த துண்டில் 20,000 யூரோ கனடா தஹ்ரீகே ஜதீத் என்று எழுதப்பட்டிருந்தது.

அந்தத் துண்டின் கீழ்ப்பகுதியில் எனது பெயரை வெளிப்படுத்த வேண்டாம் என்று எழுதியிருந்தது. அவர் கூறுகின்றார்: இன்னொரு இடத்திற்கு நான் சென்றதும் அங்கு நான் இந்த உதாரணத்தை எடுத்துக் கூறினேன். இவ்வாறும் மக்கள் தியாகங்கள் செய்கின்றனர் என்று கூறினேன். அங்கும் கூட்டம் முடிந்தவுடன் ஒரு சகோதரர் ஒரு துண்டை என்னிடம் கொடுத்தார். அதில் 21,000 யூரோ சந்தா தஹ்ரீகே ஜதீதிற்காக என்று எழுதப்பட்டிருந்தது. அதற்கு கீழ் என்னுடைய பெயர் வெளியிடப்பட வேண்டாம் என்று எழுதப்பட்டிருந்தது.

இந்த சில சம்பவங்களை நான் எடுத்துள்ளேன். எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. இதை விட அதிகமாக ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய பல சம்பவங்களும் உள்ளன. இந்த சம்பவங்களைத் தேர்ந்தெடுத்து நான் கூறவில்லை. எவ்விதத்திலும் ஆராயாமல் இந்த சம்பவங்களை நான் எடுத்துள்ளேன். அல்லாஹ் இந்த எல்லா விதமான தியாகங்களைச் செய்யக்கூடியவர்களின் பொருளிலும் உயிரிலும் அளவற்ற அருள்களை வழங்குவானாக.

இதற்குப் பிறகு நமது மரபிற்கேற்ப கடந்த வருடத்தின் புள்ளி விபரங்களையும் எடுத்துக் கூறுவதுடன் தஹ்ரீகே ஜதீதின் **78வது வருடத்திற்கான அறிவிப்பை** செய்கின்றேன். அல்லாஹ் இந்த புதிய வருடத்திற்கு எண்ணற்ற அருள்கள் மற்றும் கனிகளை வழங்குவானாக.

கடந்த வருடம் தஹ்ரீகே ஜதீதின் 77வது பொருளாதார ஆண்டாக இருந்தது. அது அக்டோபர் 31 ஆம் தேதி முடிந்து விட்டது. இதுவரை வந்திருக்கும் ரிப்போர்ட்டின் அடிப்படையில் தஹ்ரீகே ஜதீதின் பொருளாதார அமைப்பில் **66 இலட்சத்து 31 ஆயிரம் பவுண்டு பொருள் தியாகத்தை ஜமாஅத் செய்துள்ளது.** அல்ஹம்துலில்லாஹ். கடந்த வருடத்துடன் ஒப்பீடு செய்யும்பொழுது, அல்லாஹ்வின் அருளால் **11 இலட்சத்து 62 ஆயிரம் பவுண்டு அதிகமாக இந்த வருடத்தில் வசூலாகி இருக்கின்றது.** ஒரு வருடத்தில் இவ்வளவு மகத்தான அதிகரிப்பு இதற்கு முன்னால் ஒருபோதும் தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் ஏற்பட்டதில்லை. இந்த அதிகரிப்பானது சந்தா தஹ்ரீகே ஜதீத் கொடுப்பவர்களின் எண்ணிக்கையிலும் இருக்கின்றது. அவ்வாறே தியாகத்தின் தரமும் மிகவும் அதிகரித்துள்ளது. உலகின் பொருளாதார நிலை மிகவும் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. குறிப்பாக ஐரோப்பாவின் நிலை இவ்வாறு ஆகிக் கொண்டிருக்கிறது. அல்லாஹ் இந்த தொகையிலும்கூட பரக்கத்தை வழங்குவானாக. மேலும் ஜமாஅத்தின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. அவை எந்தத் தடையும் இல்லாமல் நிறைவு பெற்றுக் கொண்டே செல்லட்டும். எவ்வாறு உலகின் பொருளாதார சீர்குலைவு சந்தாக்களில் எவ்வித குறைவையும் ஏற்படுத்தவில்லையோ அவ்வாறே தியாகங்களிலும் எவ்வித குறைவும் வரவில்லை. இவ்வாறு இந்தப் பொருளாதார சீர்குலைவு நமது திட்டங்களில் எவ்வித தடையையும் ஏற்படுத்தாமல் இருக்கும்படி அல்லாஹ் செய்வானாக.

இறைவனின் அருளால் **பாகிஸ்தானில்** கடுமையான பொருளாதார பாதிப்பு இருந்தும் கூட வாழ்வாதார நிலைமைகள் மோசமாக இருந்தும் கூட அவர்கள் தமது தியாகத்தை நிலைநாட்டி வருகின்றார்கள். **முதல் இடத்தில்** அவர்கள் நிற்கின்றார்கள்.

இதற்குப் பிறகு இந்த வருடம் **இரண்டாவது இடத்தில் அமெரிக்கா** இருக்கின்றது. **மூன்றாவது இடத்தில் ஜெர்மனி** இருக்கின்றது. **நான்காவது இடத்தில் U.K.** இருக்கின்றது. கடந்த வருடம் பாகிஸ்தானுக்கு அடுத்த படியாக U.K. இரண்டாவது இடத்தில் இருந்தது. மூன்றாவது இடத்தில் அமெரிக்கா இருந்தது. நான்காவது இடத்தில் ஜெர்மனி இருந்தது. ஜெர்மனி நான்காவது இடத்திலிருந்து மூன்றாவது இடத்திற்கு வந்துள்ளது. மிகப்பெரும் தியாகம் செய்து இந்த இடத்திற்கு வந்தது. **கனடா இதற்கு முன்னர் இருந்தது போன்றே ஐந்தாவது இடத்தில் உள்ளது.** இந்தோனேஷியா பொருளாதார ரீதியாக பெரும் தியாகங்களைச் செய்துள்ளது. ஆனால் இந்தியாவின் ஜமாஅத்துகளும் பெரும் தியாகங்களைச் செய்திருப்பதால் **இந்தோனேஷியா ஏழாவது இடத்தில்** இருக்கின்றது. **ஆஸ்திரேலியா எட்டாவது இடத்தில்** இருக்கிறது. **ஒரு அரபு நாடு இருக்கின்றது; அதன் பெயரை நான் கூறமாட்டேன். அது ஒன்பதாவது இடத்தில்** இருக்கிறது. **சுவிட்சர்லாந்து பத்தாவது இடத்தில்** இருக்கின்றது.

தனி நபர்கள் செலுத்துகின்ற சந்தாவின் தரத்தில் அமெரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது. அங்கு சராசரியாக தனி நபர் சந்தா 118 பவுண்டு ஆகும். இதற்கு அடுத்தபடியாக சுவிட்சர்லாந்தும், அதற்கு அடுத்தபடியாக பெல்ஜியமும் இருக்கின்றது. உள்ளூர் கரன்ஸிகளிலும் அதிகரிப்பு ஏற்பட்டுவிட்டது. அதில் எல்லாரையும் விட அதிகமாக ஜெர்மனி இருக்கின்றது. அல்லாஹ்வின் அருளால் நான் கூறியது போன்றே தியாகங்கள் செய்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்த வருடம் 1 லட்சத்தி 9 ஆயிரம் பேர் புதிதாக சந்தா கொடுப்பவர்களாகி உள்ளனர். இவ்வாறு இந்த எண்ணிக்கையில் கடந்த வருடத்திற்கு எதிரில் 1 லட்சத்தி 9 ஆயிரம் பேர் அதிகமாயுள்ளனர். ஆனால் இப்போதும் கூட எண்ணிக்கையை கூட்டுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. நான் கூறியது போன்று ஆப்பிரிக்க ஜமாஅத்துகளில் நைஜீரியா நன்றாக வேலை செய்துள்ளது. ஆப்பிரிக்க ஜமாஅத்துகளில் வசூலின் அடிப்படையில் பட்டியலில் முதலாவதாக கானா இருக்கின்றது. இதற்கு பிறகு மொரீஸியஸ் இருக்கின்றது. பிறகு நைஜீரியா இருக்கின்றது. அதிகமாக சந்தாவை அதிகரிப்பதில் கேம்பியா, புர்கினாஃபாஸோ நன்றாக முயற்சி செய்துள்ளது. சந்தாவில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குகிறது என்ற அடிப்படையில் நைஜீரியா உலகிலுள்ள எல்லா நாடுகளை விடவும் முதலாவதாக உள்ளது. இவர்கள் இந்த வருடம் 56,000 பேரை கூடுதலாக இணைத்துள்ளனர். இதற்கு அடுத்தபடியாக சிராலியோன், ஐவரிகோஸ்ட், புர்கினாஃபாஸோ ஆகியவை உள்ளன.

தலைமையக பதிவிற்கேற்ப முதல் பதிவேட்டில் உள்ள முஜாஹிதுகளின் எண்ணிக்கை 5,927 பேர் ஆகும். இவர்களில் 340 பேர் இறைவன் அருளால் இப்போதும் உயிருடன் இருக்கின்றனர். தங்களது சந்தாக்களை அவர்களே செலுத்தி வருகின்றனர். ஏனைய மர்ஹூம்களின் சந்தாக்களை அவர்களது வாரிசுகள் கொடுத்து வருகின்றனர். சந்தாவின் அடிப்படையில் முதல் மூன்று ஜமாஅத்துகள் இவையாகும். 1) லாஹூர் 2) ரப்வா 3) கராச்சி. நகரில் உள்ள ஜமாஅத்துகளில் முதல் 10 இடங்களில் உள்ள ஜமாஅத்துகள். 1) ராவல்பிண்டி 2) இஸ்லாமபாத் 3) கொய்டா 4) உகாடா 5) ஹைதராபாத் 6) பெ–ாவர் 7) மீர்பூர்ஹாஸ் 8) பாவல்பூர் 9) தீரா ராஸிகன் 10) நவாப் –ா.

மாவட்ட அளவில் தியாகங்கள் செய்துள்ள பாகிஸ்தானிய மாவட்டங்கள்: 1) ஸியால்கோட் 2) உமர்கோட் . இந்த உமர்கோட் பகுதியிலும் மீர்பூர்ஹாஸிலும் மழை பெரும் இழப்பை ஏற்படுத்தியது. வயலில் வேலை செய்பவர்களாக இருந்தும்கூட இவர்கள் தமது தியாகங்களில் நிலைபெற்று நிற்கின்றன. 3) சர்கோதா 4) ே–க்பூர் 5) குஜாராத் 6) பாவல்பூர் 7) ரதீம் 8) நாரொவால் 9) சால்கடு. மீர்பூர், ஆஸாத் காஷ்மீர், ஹிஃபாஸாபாத் ஆகியவை பத்தாவது இடத்தில் இருக்கின்றது.

*(இதைத் தொடர்ந்து ஹுஸுர் அவர்கள் அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து, கனடா ஜமாத்துகளின் உள்ளூர் தர வரிசை பட்டியலை கூறினார்கள்.)*

**இந்தியா ஆறாவது இடத்தில்** இருக்கின்றது. இந்திய ஜமாஅத்துகளின் பெயரை நான் கூறுவதற்கான காரணம் இந்த நாட்டில்தான் காதியான் இருக்கின்றது. அங்குதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தோன்றினார்கள். அவர்களது தங்குமிடமாக அது இருந்தது. மாநிலங்களில் முதல் பத்து இடங்களை வகிக்கும் மாநிலங்கள்.

| | |
|---|---|
| 1. கேரளா | 6. கர்நாடகா |
| 2. தமிழ்நாடு | 7. ஒரிசா |
| 3. ஆந்திர பிரதேசம் | 8. பஞ்சாப் |
| 4. ஜம்மு காஷ்மீர் | 9. உ.பி |
| 5. பெங்கால் | 10. டெல்லி |

ஜமாஅத்துகளில் முதல் பத்து இடங்ளை வகிப்பவை.

| | | | |
|---|---|---|---|
| 1. | கருலாயி | 6. | காதியான் |
| 2. | காலிகட் | 7. | கோயம்புத்தூர் |
| 3. | ஹைதராபாத் | 8. | சென்னை |
| 4. | கொல்கத்தா | 9. | பைங்காடி |
| 5. | கன்னனூர் டவுண் | 10. | டெல்லி |

இந்த முறை சில ஜமாஅத்துகள் வழக்கத்திற்கு மாற்றமாக தங்களது சந்தாக்களை அதிகமாக்கியுள்ளது. தஹ்ரீகே ஜதீதின் சந்தா தலைமையக சந்தாவாகும். இதில் உள்ளூர் அல்லது நாட்டின் ஜமாஅத்திற்கு எந்த பங்கும் கிடையாது. தலைமையகத் திட்டங்கள் இந்தியாவில் இருக்கின்றது. ஏனைய ஏழை நாடுகளில் இருக்கின்றது. ஆப்பிரிக்காவிலும் இருக்கின்றது. அல்லது தலைமையகச் செலவுகள் இந்த சந்தா மூலம் நிறைவு செய்யப்படுகிறது.

ஆனால் இந்த முறை இவர்களது வழக்கத்திற்கு மாற்றமான வசூலின் காரணமாக அதாவது அமெரிக்காவும் ஏறக்குறைய 1 லட்சத்து 88 ஆயிரம் பவுண்டுகள் அதிகமாக வழக்கத்திற்கு மாற்றமாக வசூல் செய்துள்ளது. எனவே அதன் டாலர்களின் தொகையிலிருந்தும் அவர்களுக்கு உரிமை இல்லாத நிலையிலும் அவர்களுக்கு நான் இதிலிருந்தும் 1 லட்சம் டாலர் அவர்களுக்குரிய பங்காக தரப்படுகிறது. ஜெர்மனி வழக்கத்திற்கு மாற்றமாக சந்தாவை அதிகரிக்கச் செய்துள்ளது. 3 லட்சத்திற்கும் அதிகமாக இவர்களது சந்தாவில் அதிகரிப்பு ஆகியிருப்பதால் இவர்களுக்கு 1.5 லட்சம் யூரோ இதிலிருந்தும் வழங்கப்படுகிறது. அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருவதால் இந்த தொகையை அவர்கள் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருவதால் இந்த தொகையை அவர்கள் பள்ளிவாசல்கள் கட்ட பயன்படுத்த வேண்டும் என்பதற்காக இது அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இங்கிலாந்தும் சந்தாவை போதுமான அளவில் அதிகரிக்க செய்துள்ளது. ஆனால், ஜமாஅத்திற்கு இதற்கு முன்னர் இருந்த சுமை இப்போது இல்லை. எனவே 50,000 பவுண்டு பள்ளிவாசல்கள் கட்டுகின்ற செலவுக்காக தரப்படுகிறது. ஏனென்றால், இப்போது பள்ளிவாசல்களைக் கட்டுவதன் பக்கம் உங்களுக்கும் கவனம் ஏற்பட்டுள்ளது. அல்லாஹ் எல்லா வகையிலும் இதை அருளுக்குரியதாக ஆக்குவானாக! எதிர்காலத்தின் முன்பை விட அதிகமாக தியாகங்கள் செய்வதற்கான தஃவ்பீக்கை வழங்குவானாக! இந்த எல்லாரது பொருளிலும் உயிரிலும் அளவற்ற அருள்களை வழங்குவானாக!

இப்போது ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். இது நமது பெரியவரான மதிப்பிற்குரிய மஸ்வூது அஹ்மது சாஹிப் தெஹ்லவி அவர்களின் ஜனாஸாவாகும். நவம்பர் மாதம் 3 ஆம் தேதி அதிகாலை 3 மணிக்கு தமது 91 வது வயதில் இவர் வஃபாத்தாகியுள்ளார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இவர் ஜமாஅத்தின் பழைய தொண்டராக இருந்தவர். வாழ்க்கையை ஜமாஅத்திற்காக அர்பணித்திருந்தார். அல் ஃபஸ்ல் நாளிதழின் ஆசிரியராக இவர் இருந்திருக்கிறார். இவர் 1920 ஆம் ஆண்டில் டெல்லியில் பிறந்தார். இவரது தந்தையார் சஹாபியாக இருந்தார். அந்த சஹாபி 1900 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார். இவரது தாத்தாவும் சஹாபியாக இருந்தார். இவர் 1890 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார். 1944 ஆம் ஆண்டில் மதிப்பிற்குரிய தெஹ்லவி சாஹிப் அவர்கள் தனது வாழ்க்கையை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்தார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அல் ஃபஸ்ல் நாளிதழின் துணை ஆசிரியராக இவரை நியமித்தார்கள். பிறகு பஞ்சாப் பல்கலைக் கழகத்திலிருந்தும் லாஹுலிரிலிருந்தும் பத்திரிகைத் துறையில் இவரை முதுகலைப் படிப்பு படிக்க செய்தார்கள். 1946 லிருந்து 1971 வரை அல் ஃபஸ்ல் நாளிதழின் துணை ஆசிரியராகத் தொண்டு செய்யும் நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. 1971 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டு வரை அல் ஃபஸ்ல் நாளிதழின் ஆசிரியராக தொண்டு புரியும் நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. இவ்வாறு ஒட்டுமொத்தமாக 43 வருடங்கள் வரை அல் ஃபஸ்ல் நாளிதழுடன் தொடர்புள்ள காதியான், லாஹூர் மற்றும் ரப்வாவில் உள்ள துறைகளில் இவர் பணியாற்றி வந்தார்.

1946 ஆம் ஆண்டு வகீலுத் தஃப்ஸீரின் தற்காலிக உதவியாளராகவும் இவர் தொண்டு செய்து வந்தார். காதியானில் தொண்டாற்றும் நல்வாய்ப்பும் கிடைத்தது. 1947 ஆம் ஆண்டின் மிகவும் அபாயகரமான நிலைமைகளில் அப்போதிருந்த நாஸிர் உமூரே காரிஜாவின் உதவியாளராக தொண்டு புரியும் நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. 1950 ஆம் ஆண்டிலிருந்து 1953 ஆம் ஆண்டு வரையிலான துக்கமான காலக்கட்டத்தில் ரிப்போர்டிங்கில் அவர் பெரும் தொண்டாற்றி வந்தார். 1960 லிருந்து 1973 வரை பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் அன்ஸாருல்லாஹ் மாத இதழின் எடிட்டர் ஆகவும் இவர் இருந்தார். 1974ல் பத்திரிகைத்துறை சம்பந்தப்பட்ட பொறுப்புகளை இவர் சிறப்பாக நிறைவேற்றி வந்தார். 1975, 1976 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடன் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய இடங்களில் அன்னாருடன் சேர்ந்து சுற்றுப் பயணம் செல்வதற்கான நல்வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. 1982 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடன் ஸ்பெயினில் மஸ்ஜிது ப-ாரத்தின் துவக்க நிகழ்ச்சியில் இவர் சென்றிருந்தார். 1989ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியில் கஸா துறையை அதாவது நீதித்துறையை நிறுவுவதற்கான நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் நூலான Murder in the Name of Allah என்பதிலுள்ள அதிகாரங்களை ஹுஸுர் ரஹிமஹுல்லாஹி தஆலா அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியிருந்தார்கள். இதன் உருது மொழியாக்கத்தை இவர் செய்தார். இவ்வாறே Christianity a Journey from Facts to Fiction என்ற நூலையும் இவர் உருதுவில் மொழிபெயர்த்தார். இவரும் சில நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் சப்பே ஹயாத் மற்றும் இன்னும் மற்ற நூல்களும் அடங்கும். இவரது பிள்ளைகளில் இர்ஃபான் அஹ்மது கான் சாஹிப் அவர்கள் ஜெர்மனியில் இருக்கின்றார். இன்னொரு மகன் உஸ்மான் கான் சாஹிப் ஜெர்மனியில் இருக்கின்றார். டாக்டர் இம்ரான் காலித் ரப்வாவில் இருந்து வருகின்றார். மிக நல்ல எளிமையான இயல்பைக் கொண்டவராக இவர் இருந்தார். ஒவ்வொரு வருடமும் ஜெர்மனியில் நடைபெறும் ஜல்ஸாவிற்கு வருவார்கள். இங்கும் வருவார்கள். நான் மீண்டும் ஜெர்மனி சென்ற சமயத்தில் அவரது உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தது. நோய்வாய்ப்பட்டு மருத்துவனையில் இருந்தார். ஆனால், எனது வருகையைப் பற்றி கேள்விப்பட்டதும் மருத்துவமனையிலிருந்து சீக்கிரமாக வெளியேறி விரைவாக சென்று எனக்குப் பின்னால் பள்ளிவாசலில் தொழும் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும் என்ற கவலைதான் அவருக்கு இருந்தது. பிறகு அவர் வந்தார். ஜுமுஆ நாளில் பொதுவாகவும் எந்த தொழுகைக்குப் பிறகு யாரையுமே நான் பள்ளிவாசலில் வைத்து சந்திப்பதில்லை. ஆனால், இந்த நாளில் இவரை சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு வந்தது. ஜுமுஆவிற்குப் பிறகு இவரை இறுதியாக நான் சந்தித்தேன். அல்லாஹ் இவரது தர்ஜாவை உயர்த்துவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 04.11.2011**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005.

TELEFAX : 0462 - 2352456